தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
3049-0723
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# திருமந்திரம் பாடல்களில் பிறப்பறுக்கும் வழிகள்
# Paths to Liberation from Rebirth in Thirumandiram Verses

**முனைவர் ர. ஜெகன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

கற்பகம் உயர்கல்விக்கழகம், கோவை-21

மின்னஞ்சல்: jagaravi88@gmail.com

**Dr. R. Jagan**
Assistant Professor, Department of Tamil, Karpagam Academy of Higher Education,
Coimbatore-21 Email: jagaravi88@gmail.com

**Abstract:**

Only those who comprehend the ultimate truth possess true spiritual wisdom. They were called Siddhas and Gnanis (sages). Among them, Thirumoolar stands out as one of the most prominent. His verses contain a wealth of information including the Ashtama Siddhis (eight supernatural powers), paths to attaining God, and medical knowledge. Among these diverse topics, this article focuses on exploring the mystery of human birth and the paths that lead from fleeting worldly pleasures to ultimate bliss (Moksha/liberation)

**Keywords**: Human birth / Human existence, Types of birth / Categories of birth, God who ends the cycle of birth / God who liberates from rebirth, Birth itself is karma / Birth is indeed karma

## முன்னுரை

உண்மைப் பொருளை அறிந்தவரே மெய்யுணர்வு உடையோர் ஆவார். அவர்கள் சித்தர்கள், ஞானிகள் என அழைக்கப்பட்டனர். அவர்களில் தலைச்சிறந்த ஒருவராக இருப்பவர் திருமூலர் ஆவார். அவரின் பாடல்களில் அட்டமாசித்திகள், இறைவனை அடையும் வழிகள், மருத்துவம் எனப் பல செய்திகள் இடம்பெற்றுள்ளது இவற்றுள் மனிதப்பிறவியின் பிறப்பின் ரகசியம், சிற்றின்பத்திலிருந்து விடுபட்டு, பேரின்பத்திற்கு (முக்தி) அழைத்துச் செல்லும் வழிகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## திறவுச்சொற்கள்

மனிதப்பிறவி- பிறப்பின் வகைகள் - பிறப்பறுக்கும் இறைவன் - பிறப்பே வினைதான்.

## மனிதப்பிறவி

இறைவனால் படைக்கப்பட்ட நவக்கிரகங்களில் பூமிக்கோளில் மட்டும்தான் உயிரினங்கள் வாழ்கின்றன, இறக்கின்றன, பிறக்கின்றன. மீதமுள்ள ஏனைய கோள்களில் உயிரினங்கள் வாழமுடியாது என்பது இறைவனால் தீர்மானிக்கப்பட்டபோதும், மனிதன் தனது விஞ்ஞான அறிவினால் அங்கு சென்று வாழ்ந்திட பல வழிகளைக் கண்டு அறிந்து வருகிறான். இப்புவியில் ஆறறிவுள்ள மனிதன் மட்டுமின்றி ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள புல்,பூண்டு,செடி, கொடி,மரம்,விலங்குகள் ஆகியனவும் வாழ்ந்து மடிகின்றன. பிறப்பின் தோற்றத்தை,

- அண்டசம் (முட்டையில் தோன்றுவன) பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன
- சுவேதசம் (வியர்வையில் தோன்றுவன) கிருமிகள், பேன்

- உற்பிச்சம் (வித்து, வேர், கிழங்குளில் தோன்றுவன) தாவரங்கள்
- சராயுசம் (கருப்பையில் தோன்றுவன) தேவர்கள், மனிதர்கள், விலங்குகள்

**(டாக்டர்.இராச.வசந்தகுமார், பன்னிரு திருமுறை ஆய்வு,ப.15)**

என நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. இவற்றுள் இறையை உணர்ந்து அடையும் அருளும், வாய்ப்பும் கொண்ட பிறவி மனிதப்பிறவியேயாகும். பிறவிகள் பலவற்றுள் மனிதப் பிறவியே ஏனைய பிறவிகளைக் காட்டிலும் புனிதமானதாகவும், முக்கியத்துவமானதாகவும் விளங்குகின்றது என அறிவார்ந்த முன்னோர்கள் இலக்கியங்கள் தோறும் பதிவு செய்துள்ளனர். இக்கருத்தினை,

**"அரியது கேட்கின் வரிவடி வேலோய்**
**அரிது அரிது மானிடராதல் அரிது (தனிப்பாடல் திரட்டு, பா.245)**
**பெறுதற்கு அரிய பிறவி" (திருமந்.2090:1)**

என்ற பாடலடிகள் மூலம் உணரமுடிகிறது. அதாவது, மனிதப்பிறவி தாய்,தந்தை,பிள்ளைகள் என்ற பாசப்பற்றுகளில் பாழ்படாமலும், இறைவனிடம் சென்று சேரும் பேரின்பமே நிலையான இன்பம் என்பதனை உணர்ந்து சிற்றன்பத்தினைத் துறந்து பிறப்பினைக் களைய ஆன்மிக வாழ்க்கையே துணைகோலுகிறது என்பதை உணரவேண்டும்.

**பிறப்பின் வகைகள்**

இறைவனால் படைக்கப்படுகின்ற பிறப்பின் வகையானது ஏழு வகையாக அமைகிறது என்று இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. பிறப்பின் வகைகளைத் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், ஊர்வன, நீர்வாழ்வன, பறவைகள், தாவரங்கள் என நம் முன்னோர்கள் வகுத்துக் கூறியுள்ளார். மனிதன் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பிறப்பும் மாறுகிறது. இதனை,

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" (திருவாசகம்.பா.18)**
**"எண்ணிக்கும் ஏழேல் பிறவி உணர்விக்கும்" (திருமந்.1523:2)**
**"பசுப்பல கோடி பிரமன் முதலாய்" (திருமந்:**2406:1)

என்று திருவாசகமும், திருமந்திரமும் விளக்கிச் செல்கின்றன. அதாவது, ஏழு பிறவிகளிலும் இறையருளால் கிடைத்ததே புண்ணியப்பிறவி இம்மனிதப்பிறவி என்பதை மேற்கண்ட பாடல் மூலம் உணரமுடிகிறது.

**சிற்றின்ப ஆசை**

உடலில் இணைந்துள்ள ஐம்பொறிகளின் வேட்கையினால் ஆன்மா (உயிர்) தவிக்கின்றது. ஆசையும், பாசமும் உயிரை எங்கெங்கோ இழுத்துச் செல்கின்றன. உடலோடு ஒன்றியிருக்கும் உயிர் தனது பிறவியின் நோக்கத்தை மறந்து புலன் (உணர்வு) இன்பங்களை நாடுகின்றது. இதன் காரணமாக இவ்வுயிர் செய்யும் செயல்களின் பலன் வினைப் பயனாகச் சேர்கின்றன. அந்த வினைப்பயன்களின் விளைவால் மீண்டும் பிறவிகள் ஏற்படுகின்றது. இதனையொட்டியே ஆசையே அனைத்துவிதமான துன்பங்களுக்கும் காரணம் என்பதை,

**"ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்" (திருமந்.2615:3)**

என திருமூலர் கூறுகின்றார். பிறப்பு தொடராமல் இருக்கவேண்டுமெனில் உலக ஆசைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதே சாலச் சிறந்ததாகும் என்பதை உணரமுடிகிறது. உதாரணத்திற்கு புலால் உண்ணுதல் கூட பேரின்பத்தை மறந்து சிற்றின்பத்தில் வாழ வழிச்செய்கிறது என்பதைத் திருமூலர்,

**"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தின்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே" (திருமந்:199)**

இவ்வாறு சாடுகிறார். கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! என்று புலன்கள் அடக்கமின்றித் திரியும் மனிதர்களே மீண்டும் மீண்டும் பிறந்து துன்பமடைகின்றனர். மனக் கட்டுபாடு அற்றவன், புலால் உண்பவன், சான்றோர்களைச் சாடுபவன், போன்றவர்களுக்குப் பிறவி தொடரருவதோடு விலங்குகளின் உருவம் கொண்டு துன்பம் அடைவான் என்று திருமூலர் பாடல்களில் வழி அறிய முடிகிறது.

**பிறப்பறுக்கும் இறைவன்**

பிறப்பில்லாத வீடுபேறு (முக்தி) நிலையை அடைவதற்கு சிவபெருமானையே சரணடைய வேண்டும் என்று இறைவனின் திருவடி கண்ட சான்றோர்களும், சித்தர்களும், புராணக்கதைகளும் விளக்கிச் சொல்லும் உண்மையாகும். வினைப் பயனால்தான் பிறவிகள் தொடர்கின்றது. பேரின்பத்தை அனுபவிக்காமல் இருந்து விட்டால் என்னவாகும்? பிறப்பு - இறப்பு என்ற வட்டம் தொடரும். இதன்மூலம் கன்ம வினைகளே பெருகும். இந்த பிறப்பறுக்கும் ஒரே வழி இறைவனை நாட வேண்டும், அதன் மூலம் தான் சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை(இறைவன்) அடைய முடியும் என்பதை சான்றோர்கள் வலியுறுத்துகின்றனர். இச்செய்தியினை,

**பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமாள் (திருவாசம்.பா.1:48)**

**பிறப்பிலி நாதன் (திருமந்.86:1)**

**இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி (திருமந்:287:3)**

**இளங்கொளி ஈசன் பிறப்பொன்றும் இல்லி (திருமந்:2684:1)**

என்னும் பாடலடிகள் மூலம் சமயச் சான்றோர்கள் விளக்கம் தருகின்றனர். அதாவது, நடப்பது அனைத்தும் இறைவனின் ஏற்பாட்டின் படித் தான் நடந்துகொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்தவன். இந்த உலகத்தின் அனைத்து உண்மையையும் புரிந்துக்கொண்டு எளிமையாக வாழ்கின்றான். இதற்கு மாறாக, சிற்றின்பத்தை நாடி பேரின்பத்தை மறந்து வாழ்பவர்கள் என்றும் பிறப்பின் வாசனையை (வினை) அறியமுடியாதது என்பதே உண்மையாகும் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

**பிறப்பும் ஆனந்தமே**

பல்லாண்டு காலமாகப் பிறப்பினைக் கண்டு அச்சம் கொள்ளும் வேளையில் கிடைத்திருக்கும் பிறப்பு மீண்டும் இறைவனின் திருவருளோடு தொடர்வதும் ஆனந்தமே என்று சமயச் சான்றோர்கள் உரைக்கின்றனர். ஈசனுடைய பேரழகைக் காணவும், ஆனந்த நடத்தைக் காணவும், அருளை அனுபவிக்கவும் வாய்ப்பாக அமைவது இப்பிறப்பே என்று விளக்கம் அளிக்கின்றார்கள். இதனை,

**மனித்த பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே (தேவாரம் 81:4:)**

என்று பாடலடி உணர்ந்துகின்றது. தத்துவ ஞானியான திருமூலர், எம்பெருமானின் அருள் கிடைக்குமெனில் மீண்டும் மீண்டும் பிறந்து வருவதும் இன்பமே எனப் பதிவு செய்கின்றார்.

**இன்பப் பிறவிக்கு இயல்வது செய்தவன் (திருமந்:281:1)**

**இன்பப் பிறவிப் படைத்த இறைவன் (திருமந்:432:1)**

**இன்எய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை (திருமந்:1586:1)**

எனப் பாடல்கள் வழி மெய்ஞ்ஞானிகளும் மறுபிறவியை விரும்புவதை அறியமுடிகிறது.

**பிறப்பே வினைதான்**

கருமம் என்பதே "**கன்மம்**" என அழைக்கப்படுகிறது. கருமம் என்பதற்கு வினை(செயல்) என பொருள்படும். இதனை **"ஊழ்"** என்று அழைக்கலாம். எல்லாச் செயல்களுமே வினையினால்தான் நடக்கிறது. பிறப்பும் வினையின் பயனாகும். வினையை அறுக்கக்கூடியவர் இறைவன் மட்டுமே, என்;ற கருத்தினை,

**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவன்அருளாலே (திருமந்:2611)**

என்றும்,

**தான்முன்னம் செங்த விதிவழிதான் அல்லால்**
**வான்முன்னம் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை (திருமந்:2848:1-2)**

என்ற திருமந்திரப்பாடல்களின் வழி உணரமுடிகிறது. திருமூலர் தனது பாடலின் வாயிலாக, தன்னுள்ளே இறைவன் விரும்பி வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்த தத்தவஞானிகள் தங்களின் முனைப்புகளையும், பற்றுகளையும் விட்டொழித்து, முன்செய்த வினையில் பாவமூட்டையினை முடிச்சை அவிழ்த்து இன்பமடைவர் எனவும், மனிதப்பிறவி படும் துன்பம் அனைத்திற்கும் வினையே என்று உணராத மானுடவர்களை மூடர்கள் என்றும், தன்னை உணரும் அறிவார்ந்த மானுடர்களாலே விதியினை மாற்ற முடியும் என்கிற கருத்தினை வலியுறுத்துகிறார்.

**புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து**
**கண்மூடி உருகணம் இருக்களன் றால்பாழ்த்த (திருமந்:2597:3)**

என்னும் பாடலடிகள் நிறுவுகின்றன. தொடரும் பிறவியில் தாயின் வயிற்றில் கரு உருவாகும் பொழுதே இன்னின்ன இன்பத் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது என்பதை அறிந்துக் கொள்முடிகிறது.

**இறையைத் தேடி ஓடும் மூடர்கள்**

உயிருக்கும் இருப்பிடமாக அமைவது உடலேயாகும். உடலைக் கொண்டே உயிரை அறிந்து கொள்ள முடியும். உயிருக்கு ஆதாரமாக இருக்கும் உடலே இறைவன் வீற்றிருக்கும் ஆலயமாகும். இந்த உண்மையை உணராமல் இறைவன் ஆலயங்களில் இருந்து மட்டும்தான் அருள்புரிவான் என்ற நம்பிக்கையில் பல்வேறு திருத்தலங்களுக்குச் செல்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ள மனிதர்களைப் பார்த்து சித்தர் சிவாக்கியார்,

**கோயிலானது ஏதடா குளங்களாவது ஏதடா**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**

**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே (சிவவாக்கியர்.பா.35)**

என்ற பாடல் வழி கூறுகின்றார். இறைவழிபாட்டை உடல் வழியில் முறைப்படுத்தி வழிபட வைக்க முயன்ற திருமூலர்,

**ஆதியுமாய் அரனாய்உட லுள்நின்ற (திருமந்:15:1)**

**உள்ளூறு சோதியை (திருமந்:431:1)**

**ஊனை விளக்கி உடன்இருந் தானே (திருமந்:1529:4)**

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் (திருமந்:1823:1)**

**காயப்பைக்குள் நின்ற கள்வன் (திருமந்:2122:3)**

இவ்வாறு விளக்குகிறார். அதாவது, இறைவன் நமக்குள் பரந்து விரிந்து இருக்கிறான். கடவுளை உணர்ந்தவன் பேரின்பத்தை அடைகிறான். அதை மனிதன் உணர்ந்திட வேண்டும். உடலும் உயிரும் தனியாக இருக்கிறது ஆனால் இதன் உள்ளே இறைவன் இருப்பது உண்மை என்பதை உணரவேண்டும்.

**பிறப்பறுக்கும் வழி**

பிறப்பறுக்கும் ஒரே வழி முக்தியாகும். அதாவது, இறைவனின் திருவடியை அடையவதாகும். முக்தி என்பது வீடுபேறு, மோட்சம், வீடுபடுகை, விடுதலை என்று பொருள். உயிர்கள் பாச பந்தத்திலிருந்து முற்றிலும் விடுபட்டு பதியினை (இறைவனை) அடைவதே முக்தி எனப்படுகிறது. இக்கருத்தினை,

**தூங்கி கண்டார் சிவலோகமும் தம்உள்ளே (திருமந்:129:1)**

**சொரூபத்து இருத்தினன் சொல்இறந் தோமே (திருமந்:1593)**

**மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை (திருமந்:1900:1)**

**உரைஉணர்ந்து ஆரமுது தொக்க உணர்ந்துளோன்**
**கரை கண்டான் உரைஅற்ற கணக்கிலே (திருமந்:2511:3-4)**

மனத்தின் இயல்புகளைத் தன் அனுபவ அறிவால் ஆராய்ந்து வாழ்வதே சிறப்பாகும். சிற்றின்பச் சிந்தனை அற்று இருப்போருக்கு வினை அறுபட்டு, சிவனின் திருவடிகளை அடையலாம் என்பதை திருமூலர் இப்பாடலின் மூலம் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

- இறைவன் உலகைப்படைத்த கருத்தாவாக, அனைத்திற்கும் காரணமாக உள்ளார். மனிதப்பிறவிதான் அனைத்து பிறவிகளைக் காட்டிலும் முதன்மை வாய்ந்ததாகும்.
- மனிதப் பிறவி மட்டுமின்றி இவ்வுலகில் பல உயிரினங்கள் பிறக்கின்றன, வாழ்கின்றன, இறக்கின்றன என வாழ்வியல் தத்துவத்தை திருமூலர் பாடல்களில் காணமுடிகிறது.
- சிற்றின்பத்திற்குள் மாட்டிக்கொண்டு தவிக்கும் உயிர்களுக்கு மெய்யறிவு புகட்டும் வகையில் பல பாடல்களைப் பாடியுள்ளார்.
- மனிதப்பிறப்பை கட்டி இழுக்கும் கயிறாக இருப்பது அவரவர் செய்யும் வினையாகும். இந்த வினை மனிதப்பிறவியை எவ்வாறு பேரின்பத்தை அடைய தடையாக உள்ளது என்பதையும் உணரமுடிகின்றார்.
- பிறப்பறுக்கும் ஒரே வழி இறைவனின் திருவடியை அடைவேதே என்ற மெஞ்ஞானத்தை திருமூலர் எடுத்துரைக்கின்ற விதத்தை இக்கட்டுரையின் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. அறிவொளி.அ (உ.ஆ), சித்தர் பாடல்கள், வர்த்தமான் பதிப்பகம், சென்னை-17. முதற்பதிப்பு -2005.
2. கன்னியப்பன்.சிவ (உ.ஆ), தனிப்பாடல் திரட்டு, முல்லை நிலையம், சென்னை -17. முற்பதிப்பு -2004.
3. சிவஞானம்.வீ, தேவாரம் மூலமும் உரையும் வரலாற்று முறை, விஜயா பதிப்பகம், கோவை-01. முதற்பதிப்பு -2016.
4. சிவஞானம்.வீ. திருவாசம் மூலமும் உரையும், விஜயா பதிப்பகம், கோவை -01. முதற்பதிப்பு-2017
5. மாணிக்கவாசகன்.ஞா (உ.ஆ), திருமூலர் திருமந்திரம் மூலமும் விளக்க உரையும், உமாபதிப்பதிப்பகம், சென்னை-1, முதற்பதிப்பு -2003.
6. வசந்தகுமார். இராச, பன்னிருதிருமுறை ஆய்வு, பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் உயர் கல்விக்கழகம், கோவை -21. முதற்பதிப்பு -2015.



**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.